
Newsletter of Darma Muneeswaran Temple
VOLUME 34 October 2016
MCI(P)102/12/2012





## விநாயகர் சதுர்த்தி விழா


நமது ஆலயத்தில் சதுர்த்தி விழாவை முன்னிட்டு எல்லா மங்களங்களையும் தரக்குடிய ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு தங்க ஆபரணங்கள், தங்க நாணயங்களினால் சுவர்ணாபிஷேகம் செய்யப்பட்டது. பக்தர்கள் திரளாக வந்து தங்கள் பேராதரவை நல்கினர். அடுத்த ஆண்டு மாசி மாதம் தங்கக் கவசப் பணிகள் பூர்த்தியாகி, ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு தங்கக் கவசம் அணிவிக்கப்படுமென்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



## ஆவணி ஞாயிறு வார அன்னதானம்

ஆவணி மாதம் என்றாலே சிம்ம மாதம் என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்படுகிறது. அன்னை மஹா மாரயம்மனுக்கு வாகனமானது சிம்மமாகும். இந்த மாதத்தின் ஞாயிற்றுக்கிழமை அன்னைக்கு விசேஷமாகும்.

## தீபாவளி பண்டிகை



தீபாவளியன்று அனைவரும் குடும்பத்துடன் செய்ய வேண்டியவை, வீட்டை அலங்கரித்தல், விதவிதமான பலகாரங்களைச் செய்தல், தீபங்கள் ஏற்றுதல், கோலம் போடுதல், எண்ணெய் நீராடுதல், புதுத் துணி உடுத்தல், பெற்றேரை வணங்குதல், இறைவனை வழிபாடு செய்தல். திருக்கோயிலுக்குச் செல்லுதல், நண்பர்களையும் உறவினர்களையும் உபசரித்தல் போன்றவையே அவை.



## தீர்த்தவாரி

ஆலயம் என்றால் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்பது சிறப்பு. இதில் மூர்த்தி என்பது மூலாலயத்தில் இருந்து அருள் புரியும் இறைவன். ஸ்தலம் என்பது ஆலயம் இருக்கக்கூடிய இடம். தீர்த்தம் என்பது ஆலயத்தைச் சார்ந்த தடாகம். (குளம்) பிரம்மோத்சவக் காலத்தில் பத்தாவது தினத்தில் இறைவன் தடாகத்திற்குச் சென்று நீராடுதல் தீர்த்தவாரி எனக் கூறப்படுகிறது.







## வெள்ளி ரதம்

நம்மைக் காக்கும் இறைவனை நாம் நாள்தோறும் ஆலயத்திற்கு சென்று வழிபடுகிறோம். இறைவன் ஆண்டுக்கு ஒரு முறை நம் இல்லம் வந்து, அருளாசி வழங்கும் நிகழ்ச்சிதான் ரதோற்சவமானது.



# விநாயகர் சதுர்த்தி

இந்து மத முழுமுதற்கடவுள் விநாயகப் பெருமான். அவருக்கு ஜென்ம நட்சத்திரம் ஹஸ்தம், திதி சதுர்த்தி, இந்த நட்சத்திரத்தைவிட சதுர்த்தி திதி மிகவும் விஷேசமானது. இதில் வளர்பிறையில் வரக் கூடியது சுக்ல சதுர்த்தி எனவும், தேய்விறையில் வருவது சங்கடஹர சதுர்த்தி எனவும் கூறப்படுகிறது. இதில் சங்கடஹர சதுர்த்தியானது அனைத்துவிதமான சங்கடங்களை போக்க வல்லது. ஆவணி மாதம் வரக்கூடியது மஹா சங்கடஹர சதுர்த்தி எனவும், விநாயக சதுர்த்தி எனவும் கொண்டாடி வருகிறோம். இந்த ஆவணி மாதத்தில் விநாயக பெருமான் அவதரித்ததாக, விநாயகப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது அதனால் தான் சதுர்த்தி சிறப்பு வாய்ந்தது.



## வாழைப் பழத்தையும் தேங்காயையும் முக்கியமாய் சுவாமிக்கு படைக்கும் காரணம் என்ன?

நம் சாப்பிட்ட காய், கனிகளின் கொட்டையை வீசி எறிந்தால் அவை முளைத்து புதிய மரம் உருவாகும். வாழைப்பழம் சாப்பிட்டால் எஞ்சுவது தோல். வாழைப்பழத்தோல் பிறவி எடுப்பதில்லை. தேங்காயை தின்று விட்டால் மிச்சமிருப்பது கொட்டாங்குச்சி. இவை இரண்டும் முளைப்பதில்லை, பிறவியின் துன்பங்களை ஒழித்து பிறவியற்ற நிலையை அருளுங்கள் என்ற ஒரு காரணத்திற்காகவே இந்த இரண்டு பொருட்களையும் நாம் முக்கியமாக இறைவனுக்குப் படைக்கிறோம்.

## ஓம் என்னும் மந்திரம் ஏன் புனிதமானதாகக் கருதப்படுகிறது?



ஓம் எனும் மந்திரம் ஆத்மாவை பரமாத்மாவிடம் கொண்டு சேர்க்கும் வழிகாட்டியாக இருக்கிறது. மேலும் ஓம் என்னும் பிரணவ மந்திரமே அனைத்து மந்திரங்களுக்கும் அடிப்படையான மந்திரமாய் இருக்கிறது. ஓம் எனும் ஒலியில்தான் பிரபஞ்சத்தின் இயக்கம் நடைபெறுகிறது. ஓம் எனும் மந்திர ஜபம் ஒரு மனிதன் ஞாணியாக மாற்றும் வல்லமை பெற்றது.



# Golu

Golu dolls or Bommai decorated and arranged in a steeped racks in the halls of homes and temples are one of the attractive features of the Navarathri celebration. Following Ganapathi pooja on the first day of Navarathri , a welcoming ritual called Kalasa Avahanam is performed by an elderly person or priest for goddesses Durga , Lakshmi and Saraswati .Dolls are arranged in a rack of odd-numbered shelves of (Padi), usually 3, 5, 7, 9, or 11, set up> using wooden planks.

After the Kolu has been covered with fabric it is then adorned with various dolls, figurines and toys according to their size. The deities are placed at the top. The Golu dolls displayed are mostly depictions from Puranas, court life, royal procession, ratha yatra, weddings, everyday scenes, miniature kitchen utensils or anything little children play with.

In the evenings, a Kuthuvilakku lamp is lit, in the middle of a decorated Rangoli in front of the Golu .Women folk and children gather to view the Kolu displays and sing devotional songs and perform poojas after which food items are offered to the Goddess and then to the guests..

## 12th Mother's Day Celebrations

Darma Muneeswaran Temple's recreation committee organised the 12th Mother's Day even at Serangoon Country Club , Kensington Ballroom on 15th May 2016 . As usual the mothers had a good time participating in the various games and sing along sessions . The event gave an opportunity for the children , grandchildren , friends and relatives to honour their mother's and grandmothers. Kudos to the recreation committee for organising a memorable event. " Mdm Geeta Philips who attended the event with her two teenage children said that she had a great time laughing , had very nice food and enjoyed the show with her children"





# Trip to Malacca

On 6th May 2016 , a group of 20 people from our temple made a trip to Malacca. They visited some famous places in Malacca., one of which is the Arulmigu Sanaasi Malai Andavar Temple. This temple has a 'Jeeva Samadhi' (spiritual tomb). Legend has it that a Hindu Saint stayed in the temple for many years and attained the Jeeva Samadhi state in the temple. Jeeva Samadhi happens when someone leaves his or body body in full awareness and merges with God. Our experience in the temple was beyond words. The temple and its surroundings were filled with divine vibrations. We then proceeded to the famous Jonker street which is situated at the heart of Malacca's City Centre. After completing our shopping and sight-seeing at Jonker street , we proceeded to Sri Muthu Mariamman Temple . Our group carried Varisai trays and offered ceremonial items to Muthu Mariamman. The next morning our group went on a trishaw ride at the Central Market. We purchased souvenirs and goodies for our trip back to Singapore. The trip to Malacca really lifted up our spirits!



**Congratulations Thevaram Students**

The 36TH Saiva conference was held at the Sri Thendayuthapani Temple over 3 days on 29th ,30th & 31st July. This conference was the initiative of Saivath Thiru. K. Ambalavaanar who started the Annual Thirumurai Conference in 1980, with the view to spread the glory of the 12 Thirumurais. Darma Muneeswaran Temple students won 3rd prize for Junior Group Recital.



# Adiperukku

Adiperukku is a Hindu festival celebrated on the 18th day of the Tamil month of Adi (mid-July to mid-August). The festival pays tribute to water's life-sustaining properties to invoke blessings for mankind to be bestowed with peace, prosperity and happiness. Nature worship in the form of Amman deities are organized to shower Nature's bountiful grace on human beings.






## பிரம்மோத்சவம்

ஆலயம் என்றால் நித்யவழிபாடு, வாரவழிபாடு, மாதவழிபாடு, ஆண்டு வழிபாடு என்று வழிபட வேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றன. இதில் ஆண்டு வழிபாடு நமது ஆலயத்தில் பிரம்மோத்சவமாக த்வஜாரோகணம் செய்து யாகசாலை அமைத்து பத்து தினங்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

## உணவை எப்படி பரிமாறுவது!

1. உப்பு
2. இனிப்பு பலகாரம் அல்லது பாயாசம்
3. பச்சடி, கூட்டு, பெரியல், அவியல், வறுவல், ஊறுகாய் ஆகியவற்றை வலதிலிருந்து இடது பக்கமாக பரிமாறவேண்டும்
4. அப்பளம், வடை போன்ற நொறுக்கு தீனி வகைகள்
5. சித்ரான்னம் (புளி சாதம், எலுமிச்சை சாதம் போன்றவை)
6. அன்னம்




பரிமாறும் விதம்

அன்னத்தில் முதலில் பருப்பு, நெய் பரிமாறவும். அடுத்து குழம்பும், அடுத்து ரசமும் இறுதியில் தயிர் அல்லது மோர்.




## புரட்டாசி அன்னதானம்

நமது ஆலயத்தில் புரட்டாசி அன்னதானம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 5 வாரங்கள் நடைப்பெற்ற இந்த அன்னதானத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கு பெற்று நமது ஆலயத்தில் வீற்றிருக்கும் ராமர்பிரானின் ஆசியைப் பெற்றனர்.



## குரு பெயர்ச்சி
## Guru Peryarchi

2-8-2016



## மகேஸ்வர பூஜை

மகேஸ்வர பூஜை பரமேஸ்வரனுக்கு செய்ய கூடிய பூஜை. இந்த பூஜை அன்னதானத்திற்கு முன்பு செய்ய கூடிய பூஜை. இதன் தாட்பிரியம், உணவுப்பொருட்கள் அனைத்தும் இறையருளால் உயிரினங்களுக்கு கிடைக்கின்றன, அப்படிப்பட்ட உணவுப்பொருட்களை இறைவனுக்கு அற்பணித்த பிறகே மக்களுக்கு அன்னதானமாக வழங்க வேண்டும்.

# தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற பதினெட்டு சித்தர்கள் வரலாறு - பாம்பாட்டிச் சித்தர்

இறையன்பு நிறை நெஞ்சங்களே, இந்த இதழ் தொடக்கம் பதினெட்டு சித்தர்களின் வரலாறு தொடர்ந்தாற் போல இடம்பெறவிருக்கின்றன. இன்று, பாம்பாட்டிச் சித்தரின் வரலாறு இடம் பெறுகின்றது.

தமிழகம் போற்றும் சித்தர் பெருமக்களில் பாம்பாட்டிச் சித்தரும் ஒருவர். பாம்புகளைப் பிடிப்பதும், படமெடுத்து ஆடவைத்து வேடிக்கை காட்டுவதும் அவரின் தொழில். பாம்புநஞ்சை முறிக்கும் மூலிகைகள் பலவற்றை இவர் நன்கறிந்திருந்தார். தமிழ்நாட்டின் கோவைக்கு அருகே, மருதமலையில் அந்தக் காலத்திலேயே நஞ்சுமுறிவு வைத்திய ஆய்வுக் கூடம் ஒன்றை அவர் நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.



ஒருநாள், மலை மீது பெரிய நாகப்பாம்பைப் பிடிக்க வேண்டி விரைந்து சென்றபோது, காடடில் பேரோலி, சிரிப்பாகக் கேட்டது. அதுகேட்ட அவர், “சிரித்தது யார்? எவராக இருந்தாலும் சரி..... என் முன்னே வா.....” என்று உரக்கக் கத்தினார். அப்போது ஒளியுடம்போடு சித்தர் ஒருவர் அவர் முன்பாக வந்து நின்றார்.

அவர் “நான் சித்தர் பரம்பரையில் வந்தவன்! எதற்கும் உதவாத உன் செயலைப் பார்த்தேன். சிரித்தேன். உல்லாசமான உயர்ந்த ஒரு பாம்பு காலங்காலமாக உன் உடம்பில், மூலாதாரச் சக்கரத்தில் உறக்க நிலையில் குடியிருக்கிறது. மனித உடம்புள் இருக்கும் அப்பாம்பை எவருமே அறியவில்லை. அதனைக் குண்டலினி எனக் கூறுவர். சிவத்தை உணர்வு நிலையில் வைத்து வாழும் பண்பாளர்களுக்குச், சுவாசம் ஒடுங்கும். சுவாசம் ஒடுங்கினால் குண்டலினி என்னும் அப்பாம்பு சீறி எழும். தியானத்தின் வாயிலாக அதனை ஆட்டிப் படைக்கலாம். இதனால் ஆன்மா சித்தி அடையும்” என்றார்.

ஞானச் சித்தர் பெருமான், அருள் மொழியையும் அருள் ஒளியையும் அந்த இறைஞன் மீது பாய்ச்சியருளிவிட்டு, சட்டென மறைந்தார். அவ்வாறு ஆசி கூறி மறைந்தவர், சட்டைமுனிச் சித்தர் பெருமானர் ஆவார். அந்தச் சம்பவம் பற்றி, மதிப்பிற்குரிய வேறொரு சித்தரான போகர் என்பார், தாம் இயற்றிய போகர் 7000 என்னும் நூலில், ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். சட்டை முனி சித்தர் பெருமான் சென்ற திசை நோக்கி வணங்கிய இளைஞர் அங்கிருந்த அத்தி மரத்தடியில் அமர்ந்து, சித்தர் பெருமான் உரைத்தருளியபடி தியானத்தில் அமர்ந்தார். தியான முடிவில், குண்டலினி சக்தியை முற்றுமாக உணர்ந்து அனுபவித்தார். சிறிது காலத்துக்கு சமாதி நிலையில் இருந்த பாம்பாட்டிச் சித்தர் பின்னர் தேச சஞ்சாரம் செய்து, பல சித்துகள் புரிந்தார்.

இந்த பாம்பாட்டிச் சித்தர், விருத்தாசலத்தில் சித்தி அடைந்தார் என்றும் துவாரகையில் சித்தியடைந்தார் என்றும் பல செய்திகள் கூறப்படுகின்றன. திருக்கோகர்ணத்தில் பிறந்த பாம்பாட்டிச் சித்தர் பாண்டிய நாட்டில் வாழ்ந்தார் என்றும் மருத மலையில் வாழ்ந்தார் என்றும் முரண்பட்ட பல தகவல்களும் கூறப்படுகின்றன. ஆனாலும் அவர் மருதமலையில் வாழ்ந்தவர்தான் என்பதற்கு ஆதாரமாக, அங்கு பாம்பாட்டிச் சித்தர் குகை, சுனை முதலானைவை இருக்கின்றன.

(அடுத்த இதழில் சட்டை முனி சித்தர் பற்றிய அரிய தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்).

## முன்னேறு! - தொடர் நிகழ்ச்சி




முன்னேறு! தொடர் நிகழ்ச்சியில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக தேர்வுக்குத் தயார்படுத்தும் உத்திமுறைகள் பற்றிய பட்டறை ஒன்று ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான திருமதி யோகநாதன் இப்பட்டறையை வழிநடத்தினார். தொடக்கப்பள்ளி இறுதித்தேர்வு எழுதும் மாணவர்களுக்காக ஆங்கிலத்தில் கருத்தறிதல் திறன் வகுப்புகள் நடைபெற்றன. தொண்டூழிய ஆசிரியர் தலைமையில் நடத்தப்பட்ட இந்த வகுப்பு ஏப்ரல் மாதம் தொடங்கி அக்டோகர் மாதம் முடிந்தது. இதில் கலந்துகொண்ட மாணவர்கள் தொடக்கப்பள்ளி இறுதித்தேர்வில் சிறப்பாகச் செய்ய எங்கள் வாழ்த்துக்கள்! இவ்வாண்டுக்கான முன்னேறு! பாராட்டுப் பரிசுக்குத் தகுதிபெறும் மாணவர்கள் தங்கள் தேர்வு முடிவுகளை நவம்பர் இறுதிக்குள் ஆலய அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அடுத்த ஆண்டுக்கான உதவித் தொகையைப் பெற விரும்புவோர் அதற்கான படிவத்தை ஆலய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு, நவம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Munneru! activities are on-going as in previous years. Pupils who qualify for the Munneru! award please submit your detailed results by end November 2016 to the Temple. Bursary application forms for 2017 will be made available in November 2016. Interested applicants please complete the application form and submit it to the Temple by end November 2016.

## அளப்பரிய சேவையாற்றியிருக்கும் இசை ஆசிரியை

நீண்ட நெடுங்காலமாக நம் ஆலயத்தில் இசை வகுப்புகள் நடத்தி, ஆர்வத்தால் மட்டுமேயன்றி, வேறு எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராமல், பாரம்பரியமான செவ்விசையை இளைய தலைமுறையினருக்குக் கற்பித்துவரும் பெருமை திருமதி விஜயலக்ஷ்மி பாலகிருஷ்ணா சர்மா அவர்களையே சாரும். 1934ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்த இவர், 1954ல் அப்போதைய சிங்கப்பூர் கல்விச் சேவையில் ஆசிரியாகச் சேர்ந்து, முப்பத்தெட்டு ஆண்டு அரும்பணியாற்றிய பிறகு, 1992ஆம் ஆண்டு, ஒரு பள்ளியின் முதல்வராகப் பணி ஓய்வுபெற்றார்.



பாரம்பரியமான இசைக் குடும்ப வழித்தோன்றலான திருமதி விஜயலக்ஷ்மி, ஆறு வயதிலேயே ஆரம்ப இசைப் பயிற்சியைத் தம் தாயார் திருமதி சாரதா சுப்பிரமணியத்திடம் கற்றார். அதன் பிறகு ஸ்ரீ ராஜு பாகவதரிடம் வயலின், வாய்ப்பாட்டு பயிற்சியும், பண்டிட் எம் ராமலிங்கம், காரைக்குடி மணிராஜன், திருமதி பத்மாவதி அனந்தகோபாலன், டி வி கோபாலகிருஷ்ணன், மனகல் வரதராஜன் போன்ற இசை விற்பன்னர்களிடமும் பயிற்சி பெற்றார்.

சிங்கப்பூரிலிருந்து இந்தியா சென்ற இசைக் கலைஞர்களிலேயே முதன் முதலாக ஆல் இந்தியா ரேடியோவில் பாடிய பெருமைபெற்ற முதல் கலைஞரும் இவராகத்தான் இருப்பார். இவர் அக்காலத்தின் சிங்கப்பூர் எம் எஸ் சுப்புலட்சுமி என்றும் போற்றப்பட்டிருக்கிறார். எண்ணற்ற வானொலி, தொலைக்காட்சி, மேடை, ஆலய, சமூக, அற நிகழ்ச்சிகளில் பாடியிருக்கும் இவர் சிங்கப்பூரில் நடைபெற்ற தியாகராஜர் இசை விழாவிலும், பாரதியார் விழாவிலும் முதல் பரிசுகளைப் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவராற்றிய இசைச் சேவைக்காக, வம்சித்வானி அமைப்பு இவருக்கு 2008ஆம் ஆண்டு, குரு "திருச்சி வி சுந்தரேசன் விருதையும்", கடந்த ஆண்டு லஹரி அமைப்பு, "சங்கீத லஹரி" விருதையும் திருமதி விஜயலக்ஷ்மிக்கு அளித்திருக்கின்றன. 70 ஆண்டுக்கும் மேலாக இசைச் சாகரத்தில் மூழ்கி, அரிய முத்துகளெடுத்திருக்கும் இவர், தம் இல்லத்திலிருந்தே இசை கற்றுக்கொடுத்து வருகின்றார். இவ்வாறு தம் இல்லத்தில் இவர் கற்றுக் கொடுத்தவைதாம் சௌந்தரிய லஹரியும், லலிதா சஹஸ்ரநாமமும்.

இசையே தம் பிறவிப் பயன் என்னும் தவ வாழ்க்கையை கடந்த எழுபது ஆண்டாக வாழும் திருமதி விஜயலக்ஷ்மி, உடல் நலம் குன்றிய நிலையில், இன்றும் கூட இசைப்பயிற்சி அளித்து வருகின்றார் என்பது பலரையும் முக்கின் மேல் விரல் வைக்கச் செய்கின்றது. இசையே அவரின் மூச்சு, ஆதார ஸ்ருதி, உயிர். அந்தப் பாரம்பரியத்தைத் தன்னோடு மட்டும் முடக்கிக் கொண்டுவிடாது அதை அடுத்த தலைமுறைக்கும் அளித்திருக்கும் தயாள குணம் கொண்டவர்தான் இந்த இசை நாயகி.

திருமதி விஜயலக்ஷ்மி என்னும் இசைப்பேரரசியின் கவனமான மேற்பார்வையில் செதுக்கப்பெற்ற, அடுத்த தலைமுறைக் கலைஞர்களுள் ஒருவர்தான், ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் ஆலயத்தில் கடந்த 15 ஆண்டாக இசைப்பயிற்சி பெற்று வந்திருக்கும் செல்வி புனிதா ஆறுமுகம். (அவரைப் பற்றிய கட்டுரையும் இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது).

# Punitha Arumugam

## a star from our Temple



Punitha Arumugam is a devoted student of Darma Muneeswaran Temple since the Year 2001. At the age of 6 she joined the Sangetham class in Darma Muneeswaran temple under the tutelage of Mrs Vijayaletucmi Sharma.

She was trained in carnatic music by Mrs Vjayaletchumi Sharma for 14 years, during which time she enrolled in the Thevaram classes conducted in Darma Muneeswaran Temple under the tutelage of Othuvar S Vaidyanatha Desigar. Her hardwork & dedication to music paid off with her blossoming into an accomplished vocalist. Her maiden Arangetram was held at the Singapore Civil Service Club on 8th May'2016.

Punitha is now dedicating her time in training the younger Thevaram students at our temple and was instrumental in training several competition winners in past annual Thirumurai Manadu Competitions. This year her students were 3rd prize winners. Punitha has been a prize winner at the Thirumurai Manadu Competitions for the past 13 years and has made our Temple proud on all such events. She has to her credit, the honor in performing in 3 Thevaram audio CD's,Thevara Thenisai released in 2011 by Darma Muneeswaran Temple which was a group performance . Pitha Pirai Sudi by Thirumurai Manadu & Thirumurai Thirumanam ,dual performance with her sister Rennuka ,CD was released by Dr Sivakumaran.

Punitha attributes her success in her musical journey to her teachers Mrs Vijayaletchumi Sharma , Othuvar S Vaidyanatha Desigar and to her parents who have guided her success through Darma Muneeswaran Temple. The Darma wishes Punitha all the best in her future endeavours and may Lord Darma Muneeswaran guide her to many success.

## Thiruvarutpayan



A talk on the classic Saiva literature , Thiruvarutpayan (a literature of 100 couplets) was organised at our temple , the lessons was covered over 21 days . Thiruvarutpayan was written by Umapathy Sivachariyar during the Chola empire period . The Thiruvarutpayan classes concluded on 22nd October 2016.



# DMT ACADEMY

| Classes | | Fee | Day | Time |
|---|---|---|---|---|
| Please approach temple counter staff for information on classes. | | | | |
| Hatha Yoga/அட்டாங்க யோகா (ladies only) | | $60 Individual | Monday | 7.30pm-8.30pm |
| | | $120 family | Monday | 7.30pm-8.30pm |
| Violin & Keyboard/வயலின் கீபோர்ட் | | | Wednesday | 6pm - 9pm |
| Free Homeopathy Counseling & Treatment / ஹோமியோபதி (by appoinment) | | | Wednesday | 6pm - 8pm |
| Kundalini Yoga/குண்டலினி யோகா | | | Thursday | 7pm - 9pm |
| Kindergarten Tamil Tuition/பாலர் வகுப்பு | K1 & K2 | $5 | Friday | 7.30pm-8.30pm |
| Reading Class Tamil/வாசிப்பு வகுப்பு (தமிழ்) | K1 & K2 | FOC | Friday | 8pm - 9pm |
| Bharathanaatiyam/பரதநாட்டியம் | | | Friday | 7pm - 9pm |
| Bhajans/பஜனை | | | Friday | 8.30pm |
| Tamil Tuition/ தமிழ்த் துணைப்பாட வகுப்பு | Pri 1, Pri 2, | $5 | Saturday | 10am - 11.30am |
| | Pri 3, Pri 4, Pri 5 | | Saturday | 11.30am - 1pm |
| | Pri 6 | | Fridays | 8pm - 9pm |
| Hatha Yoga / அட்டாங்க யோகா | | $35 children | Saturday | 1.30pm - 2.45pm |
| | | $60 Individual | Saturday | 1.30pm - 2.45pm |
| | | $120 family | Saturday | 1.30pm - 2.45pm |
| Gentle Yoga / முதியோருக்கான யோகா | | $30 seniors | Saturday | 12pm - 1pm |
| Saiva Siddhantha Level 1 Classes/சைவ சித்தாந்த வகுப்பு முதல் நிலை | | FOC | Saturday | 3.30pm - 5pm |
| Saiva Siddhanta Level 2 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 2ம் நிலை | | | Saturday | 5.30pm - 7pm |
| Saiva Siddhanta Level 3 Classes/சைவ சித்தாந்த வகுப்பு 3ம் நிலை | | | Saturday | 7pm - 9pm |
| Sangeetham/சங்கீதம் | | $45 | Saturday | 2pm - 7.30pm |
| Bakthi Class/பக்தி இந்து சமய வகுப்பு | | $25 | Sunday | 9am - 11am |
| Thevaaram/தேவாரம் | | $10 | Sunday | 1pm - 4pm |
| Hatha Yoga/அட்டாங்க யோகா | | $60 adults | Sunday | 8am - 9.30am |
| | | $120 family | Sunday | 8am - 9.30am |
| Sangeetham/சங்கீதம் | | $45 | Sunday | 4pm - 5pm |
| Miruthangam,Tabla/மிருதங்கம், தபேலா | | $45 | Sunday | 9am - 1pm |



## வீட்டில் தினசரி பூஜை செய்ய வேண்டும் என்று சொல்வது ஏன்?

அன்றாடப் பூஜை, நம் வீட்டில் நல்லதிர்வுகளைத் தொடர்ந்து நிலவச் செய்கிறது. மனதில் சாந்தியும், திருப்தியும், மகிழ்ச்சியும் நிலவுகிறது. பூஜையின் போது மணியடிப்பதால் பிரஞ்சப சக்தியை ஈர்க்கமுடிகிறது. மணியின் சப்தம் ஓம் எனும் பிரணவ மந்திர ஒலியையே வெளிப்படுத்துகிறது. அதே போல் பத்தி, சாம்பிராணி போன்ற வாசனைப் பொருட்கள் வீட்டிடுச் சூழலில் நல்ல மாறுதல்களை உண்டாக்குகின்றன. தீயவை விலகுகின்றன. மந்திர உச்சரிப்பு வீட்டின் சூழலில் நல் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.



## ஆடி, சர்வமளைய அமாவாசை

ஆடி மாத்தில் வரும் ஆடி அமாவசையிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சர்வமளைய அமாவாசையிலும் தர்ப்பணம் செய்வது மிக விசேஷம் என்கிறது வேதம். அமாவாசையன்று, சந்திரன் இரவில் நீர்நிலைகளிலும், பகலில் செடி கொடி, மரம் போன்ற தாவரங்களிலும் உறைகிறான் என்பதால் அத்தினத்தில் அவற்றை வெட்டுவதும் இலை, பூ கனிகளைப் பறிப்பதும் கூடாது. பிதுர்க்கள் ஒன்று கூடி இருக்கும் இத்தினத்தில் அவர்களுக்குத் தர்ப்பணம் செய்து வணங்கினால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்து நம்மையும் நமது சந்ததியினரையும் வாழ்த்துவார்கள் என்பது நம்பிக்கை.


Editorial Team

❖ A Mathivanan ❖ Poobalan Naidu ❖ N.S. Narayanan ❖ M Jaya Devi ❖ Meenatchi Sabapathy ❖ Karthikeyan Kurukal ❖ Soma Prasad

Designed & Printed by Graphicc Zone Tel: 62565747